எனது இல : SP/PCMD/6/2015
2017 சனவரி மாதம் ஆந் திகதி

சகல அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
சகல மாகாண பிரதம செயலாளர்களுக்கும்,
சகல இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
சகல திணைக்களத் தலைவர்களுக்கும்,
சகல கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்களுக்கும்.

அரச நிறுவனங்களில் மின்சக்திப் பயன்பாட்டைக் குறைத்தல்.

வலுசக்தி பாதுகாப்பு மற்றும் வினைத்திறமையான பாவனை பற்றிய தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய வலுசக்தி பாதுகாப்புத் முறைமை தொடர்பாக என்னால் வெளியிடப்பட்ட SP/PCMD/6/2015 ஆம் இலக்க 2015.10.06 ஆந் திகதிய சுற்றறிக்கைக் கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானது.

மின்சக்தி பயன்பாட்டைக் குறைப்பதன் மூலம் வலுசக்தி முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பது சகல மக்களினதும் பொறுப்பைப் போன்று கடமையுமாகும். இந்த நாட்களில் இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ள வரட்சி காலநிலை காரணமாக மின்சக்தி உற்பத்தியினை மட்டுப்படுத்த நேரிட்டுள்ளது. மேலும் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் மின்சக்தி பயன்பாட்டில் 60% - 70% இடைப்பட்ட மின்சக்தி குளிரூட்டிகளுக்காக செலவாகிறது எனத் தெரியவந்துள்ளது. இந்நிலைமை காரணமாக வலுசக்தி பாதுகாப்பு முறைகளை உச்சக்கட்டத்தில் உபயோகிப்பதனூடாக வலுசக்தியை வினைத்திறமையுடன் பயன்படுத்துதலின் மீது உங்களின் முக்கிய கவனத்தைக் கொண்டுவர விரும்புகின்றேன்.

அதற்கமைய உங்களது நிறுவனத்தில் செலவாகும் மின் அலகுகளின் அளவினை குறைப்பதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் அதற்காக எனக்கும் ஒரு பிரதியுடன் பொருத்தமான உள்ளக சுற்றறிக்கைகளை வெளியிடுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும், தேவையான தகவல்கள், தொழிநுட்ப ஆலோசனைகள் மற்றும் உதவிகளை இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையிலிருந்து பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோன்று அரச நிறுவனங்களில் மின்சார பயன்பாடு பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகளை அதிமேதகு சனாதிபதி அவர்களுக்குச் சமர்ப்பிப்பதற்காக உங்களது நிறுவனத்தின் மாதாந்த மின்சார பயன்பாட்டின் முன்னேற்றத்தினை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபையிடம் அறிக்கை செய்ய வேண்டுமென்றும் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பி.பி.அபேகோன்
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள்

1. செயலாளர், மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு - சகல பணிகளையும் கூட்டிணைப்பதற்காக
2. தலைவர், இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை - தேவையான தகவல்கள் மற்றும் தொழிநுட்ப ஆலோசனைகளை வழங்குவதற்கும் மேற்கூறியவாறு அனுப்பும் அறிக்கைகளை பகுப்பாய்வு ரீதியில் சுருக்கி அனுப்புவதற்காகவும்.

தொடர்புகள் : இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் திரு.ஹர்ஷ விக்கிரமசிங்க அவர்களின் தொலைபேசி இலக்கம் 0112677445/0112911713/0712308307